முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் - 164 /2022

**வாதி தரப்பு சாட்சி-1 குமரன் - திருமதி.எஸ்.கோமதி** பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 05.08.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:**

1) தாவா சொத்திற்கும், நான் வசிக்கும் இடத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் சுமார் 50 கிலோ மீட்டர் இருக்கும். தாவா கிராமத்தில், தாவா சொத்தை தவிர எனக்கு வேறு சொத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் பெற்றதாக சொல்லும் தேதிக்கு பின்னிட்டுதான், தாவா கிராமத்திற்கு நான் வருகிறேன் என்றால் சரியல்ல, அதற்கு முன்பே நான் வந்துள்ளேன், எனக்கு அங்கு நண்பர்கள் இருக்கிறார்கள். பிரதிவாதிகள் எனக்கு சட்ட அறிவிப்பு அனுப்பிய பின்னிட்டு இதே நீதிமன்றத்தில் அ.வ.எண் 65/2023 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். பிரதிவாதிகள் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் ஞாபகமில்லை. அ.வ.எண் 65/2023 விபரங்களை நான் படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். பிரதிவாதிகளை இவ்வழக்கு போடும்போதுதான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, அதற்கு முன்பே 3, 4 வருடங்களாக தெரியும். 1ம் பிரதிவாதியின் மாமனார் தெரியுமா என்றால் தெரியும் அவர் பெயர் ஆரோக்கியசாமி.

2) ஆரோக்கியசாமியை நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் விசாரித்த வரையில் தெரியும். 2, 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதியின் கணவர் பெயர் பீட்டர் என்றால் சரிதான். சிவக்குமார், அன்பழகன், உஷாராணி ஆகியோரை தெரியுமா என்றால் கிரையம் பெற்ற வகையில் தெரியும். மேற்படி நபர்களுடன் நான் தற்போது வரை சுமூக உறவில்தான் இருக்கிறேன் என்றால் சரிதான். நான் வழக்கு போட்டுள்ள விபரமும், பிரதிவாதிகள் என்மீது வழக்கு போட்டுள்ள விபரமும், சிவக்குமார், அன்பழகன், உஷாராணிக்கு தெரியுமா என்றால் தெரியும். அ.வ.எண் 65/2023 ல் சிவக்குமார், அன்பழகன், உஷாராணி மூவரும் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். மேற்படி நபர்களுக்கு அ.வ.எண் 65/2023 ல் எதிர்வாதம் எதுவும் இல்லாததால்தான் மேற்படி வழக்கில் ஆஜராகவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி தன் கணவர் பீட்டரிடம் இருந்து பிரிந்து கடந்த 30 வருடங்களாக வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல, சேர்ந்துதான் வாழ்ந்து வருகிறார்கள்.

3) பீட்டரின் தாயார் பெயர் தனமேரி என்றால் சரிதான். பீட்டர், தனமேரி தற்போது இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். பீட்டர், தனமேரி இருவருடனும் நான் சுமூக உறவில் இருக்கிறேனா என்றால் இல்லை. எங்களுக்குள் எந்த கருத்து வேறுபாடோ, தகராறோ இல்லை. இவ்வழக்கு விபரங்கள் பற்றி அவர்களிடம் நான் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. தாவா சர்வே எண்ணில் கண்ட சொத்துக்கள் முழுவதும் ஆதியில் 1ம் பிரதிவாதியின் மாமனார் ஆரோக்கியசாமி உடையார் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சாட்சி மீண்டும் தான் கிரையம் பெறும்போது பீட்டர் மற்றும் அவரது சகோதரர் சவரிமுத்து ஆகியோர் பெயரில் பட்டா இருந்தது, அதற்கு முன்பு யார் பெயரில் இருந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது என கூறுகிறார். நான் கிரையம் பெறுவதற்கு முன்பு சட்ட கருத்துரை பெற்றது குறித்து எனது கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பீட்டருக்கு குடிப்பழக்கம் இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4) பீட்டருக்கு குடிப்பழக்கம் உள்ளது என்றும், அதன் காரணமாக தனது மனைவி, குழந்தைகளை பிரிந்து தன் தாயாருடன் தனிப்பட்ட முறையில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல, மனைவியுடன் சேர்ந்துதான் வாழ்ந்து வருகிறார். நான் சொல்வது தவறு என்றும், கடந்த 30 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண் 65/2008 என்ற வழக்கில் தனது கணவர் பீட்டர் மீதும், தனது மாமியார் தனமேரி மீதும் தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் கிரையம் பெற்ற பின்னிட்டு தெரியும். மேற்படி வழக்கானது ஜீவனாம்சத்திற்காகவும், ஜீவனாம்ச தொகைக்காக இந்த வழக்கின் தாவா சொத்தை பற்றுகை ஏற்படுத்தவும் தாக்கல் செய்யப்பட்டது என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். பீட்டரின் சகோதரர் சவரிமுத்து என்பவர் இருக்கிறாரா என்பது பற்றியும், அவரது வாரிசுகள் பற்றியும் தெரிந்து கொண்டேனா என்றால் சவரிமுத்து உயிருடன் இல்லை, அவருக்கு வாரிசுகள் யாரும் இல்லை. சவரிமுத்துவின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகியவற்றை பார்த்தேனா என்றால் இல்லை.

5) சவரிமுத்துவின் இறப்பு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும், நான் கேள்விப்பட்டதுதான் என்றால் சரிதான். அ.வ.எண் 65/2008 ன் பிரதிவாதிகள் மேற்படி வழக்கில் ஜீவனாம்சம் கொடுக்காததால், இவ்வழக்கின் சொத்தானது இவ்வழக்கின் பிரதிவாதிகளால் கைப்பற்றப்பட்டு, மேற்படி சொத்து அவர்களின் சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எனது அனுபவத்தில்தான் உள்ளது. எனது சுவாதீனத்தை நிரூபிக்க ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கிரைய

ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு நிலுவையில் உள்ளதால் வருவாய்துறை ஆவணங்கள் பெற இயலவில்லை. சொத்தை அனுபவம் செய்வதற்கான சாகுபடி, அடங்கல், வருவாய்துறையால் பராமரிக்கப்படுகிறது என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் பொதுவாக சொத்தை அனுபவம் செய்பவர் பெயரில் அனுபவ சான்று வழங்குவது வழக்கம் என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதி அ.வ.எண் 65/2008 ன் தீர்ப்பின்படி தாவா சொத்தை அனுபவம் செய்யும் விபரம் ஊரில் அனைவருக்கும் தெரியும் என்றால் சரியல்ல. அ.வ.எண் 65/2023 வழக்கில் இவ்வழக்கின் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரை ஆவணங்களைப் பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

6) அ.வ.எண் 65/2023 வழக்கில் நான் மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்யாமலே பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். பிரதிவாதிகள் இவ்வழக்கு சொத்தை அளந்து அத்துக்காட்ட நில அளவையருக்கு பணம் கட்டி அளந்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 24.03.2018 ம் தேதியன்று பிரதிவாதிகள் தங்கள் அனுபவத்தில் உள்ளது என்றும், அதில் யாரும் அத்துமீறி பிரவேசிக்கக்கூடாது என தினசரி நாளிதழில் ஒரு அறிவிப்பு கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி அறிவிப்பு எங்களை கட்டுப்படுத்தாது. அதில் தாவா சொத்தில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை. தாவா சொத்தின் சர்வே எண் 112/1A4 ஆகும். மேறபடி சர்வே எண் 112/1A ல் இருந்து உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உட்பிரிவு எப்போது நடைபெற்றது என்றால் சுமார் 2008 ம் வருடத்திற்கு முன்பு நடைபெற்றது. 2008 ம் வருடம் உட்பிரிவு செய்யப்பட்டது என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்வசம் உள்ளது, தாக்கல் செய்யவில்லை.

7) அன்பழகன் என்பவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் கல்லடை கிராமம் கீழவெளியூரை சேர்ந்தவர். சிவக்குமார் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் கல்லடை கிராமம் கீழவெளியூருக்கு அருகில் சுமார் 10 கிமீ தொலைவில் வசிக்கிறார். 2, 3 பிரதிவாதிகள் இளவர்களாக உள்ளதால் சிவக்குமார், அன்பழகன் ஏற்படுத்திய கிரையமானது இளவர்களின் உரிமைய கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளின் பாகத்தை உட்படுத்தி நான் பெற்ற கிரைய ஆவணமானது, 2, 3 பிரதிவாதிகளின் உரிமைய பாதிக்காது என்றால் சரியல்ல, நான் இளவர்களின் சொத்தை கிரையம் வாங்கவில்லை. அ.வ.எண் 65/2023 வழக்கானது இவ்வழக்கின் தாவா சொத்தான 9 ஏக்கர் 37 செண்ட் நிலத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். 2023 ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் தாவா சொத்தில் இருந்த கிணற்றில் பிரதிவாதிகள் ஆழ்துளை கிணறு அமைத்த விபரம் தெரியுமா என்றால் அத்துமீறி போட்டுள்ளார்கள். நான் சொல்வது தவறு

என்றும், போதிய தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால் விவசாயம் செய்ய ஆழ்துளை கிணறு அமைத்துள்ளனர் என்றால் சரியல்ல, இவ்வழக்கிற்காக பொய்யாக போட்டுள்ளனர்.

8) தாவா சொத்தில் விவசாயம் செய்ய 2022 ம் வருடம் வங்கியில் கடன் பெற்று ஆழ்துளை கிணறு அமைத்து பிரதிவாதிகள் விவசாயம் செய்து வருகின்றனர் என்றால், நான் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் இருந்த போது என்னிடம் துர்லாபம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தில், மேற்படி ஆழ்ளை கிணறை அமைத்துள்ளனர், அது என்னை கட்டுப்படுத்தாது. பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் நான் அவர்களுக்கு தொடர்ந்து இடையூறு செய்து வருவதால்தான் எனக்கு எதிராக பிரதிவாதிகள் அ.வ.எண் 65/2023 வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால், பொய்யான சங்கதிகளைக் கொண்டு தாக்கல் செய்துள்ளனர். தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்பட்டுள்ள பதிவு ஆவணங்களிங்களில் பிரதிவாதிகள் தரப்பினர்கள் அல்லாததால் மேற்படி ஆவணங்கள் பிரதிவாதிகள் உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 20.02.2023 ல் நானும், எனது ஆட்களும் சென்று பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் இடையூறு கொடுத்தோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பதிலுரையில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

9) தாவா சொத்தை கிரையம் பெற்ற போது அதில் குறைவாக முத்திரை தாள் செலுத்தப்பட்டிருந்ததால் அதனை வசூல் செய்யும் பொருட்டு முத்திரை தாள் அலுவலர் 2009 ம் வருடம் அதனை பார்வையிட்டார் என்றால் ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு தெரியும். இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது தாவா சொத்தை நான் 3 ம் நபர்களுக்கு வில்லங்கம் ஏற்படுத்த முயற்சித்ததால்தான், அவ்வாறு எந்த ஆவணத்தையும் பதிவு செய்யக்கூடாது என சார்பதிவாளர் அவர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெறும்போது முறையாக மறுபயன் எதுவும் செலுத்தவில்லை என்றும், நான் முறையாக கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எப்போதும் எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ள சொத்தை நான் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஆவணங்களை தயார் செய்து இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10) எனது வழக்கு உரிமைமூலம் குறித்து விளம்புகை பரிகாரம் கேட்காமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கேட்டிருப்பதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அ.வ.எண் 65/2023 ல் கண்டுள்ள 1 முதல் 5 பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து கொண்டு பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனவே நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அ.வ.எண் 65/2023 வழக்கு அவர்களுக்கு ஆதரவாக தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**